**<u>IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF, ATTUR</u>**

**O.S. No. 253/2008**

Deposition of **<u>P.W.3</u>** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tmt. K. Janaki, Gr. III Bench Clerk of this court, on 04.03.2025 in accordance with the provision of Act 1 of 1873.

Name : வளர்மதி Husband Name : ராமலிங்கம்

துவக்க நேரம்: 03.13 P.M.

சாட்சி முன்னிலையானார் உறுதிமொழி செய்து வைக்கப்பட்டார்.

<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>

1) இந்த தேதியில், இந்த வழக்கில் சாட்சி சொல்ல , எனக்கு சம்மன் வந்ததா என்றால் இல்லை. இந்த நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதானா என்றால் ஆமாம். இந்த நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். இந்த நிரூபண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் யார் சொல்லி எழுதப்பட்டது என்றால் எனக்கே தெரியும்.

2) சோலீஸ்வரன் கோவிலுக்கு வடக்கில் என்ன உள்ளது என்றால் மகளிர் உயர்நிலைப்பபள்ளி உள்ளது, அதற்கும் வடக்கே வளையக்கார தெரு உள்ளது. சோலீஸ்வரன் கோவிலுக்கு மேற்கில், தென்வடலாக மேலவீதி உள்ளது என்றால் சரியல்ல. ராஜவீதிக்கு வடக்கில், பழைய இடிஞ்ச வீடு உள்ளது என்றால் அது பழைய வீடு, வழக்கு நடக்கும் வீடு தென்திசையில் உள்ளது.

3) இடிஞ்சுபோன வீட்டிற்கு தென்பகுதியில் செட்டியார் தோட்டம் உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. ராஜவீதிக்கு வடக்கில், மீனாட்சி அம்மாவுக்கு பாத்தியப்பட்ட இடிந்த வீடு சுமார் 100 வருடங்களுக்கு முன்பிலிருந்து இருந்து வருகிறது என்றால் இருக்கலாம்.

4) செந்தாமரை, முத்துசாமி குடியிருக்கும் வீட்டிற்கு வடக்கில், எனது மாமனார், மாமியார் பழனியம்மாள், அய்யாக்கண்ணு வீடு உள்ளது என்றால் சரிதான். பழனியம்மாள், அய்யாக்கண்ணு வீடு இடிந்த நிலையில் உள்ளது என்றால் சரிதான், ஆனாலும் எனது நாத்தனார் அதில் குடியிருக்கிறார்.

5) நான், கோட்டை சந்து என்ற இடத்தில் இருக்கிறேன் என்றால் சோலிஸ்வரன் கோவிலுக்கு பின்புறத்தில் குடியிருக்கிறேன். ஆத்தூர் - கோவிந்தபாளையம் ரோட்டின் அருகில்தான் ரேசன் கடை உள்ளது என்றால் சரிதான். சோலிஸ்வரன் கோவிலுக்கும், ரேசன் கடைக்கும் இடையில் சுமார் 1000 மீ தூரம் இருக்கும் என்றால் சரிதான். அந்த ரேசன் கடைக்கு எதிர்புறம் தெற்குபகுதியில் வாதிகளுக்கு நிலம் உள்ளது என்றால் ஆமாம். அந்த 1 1/4 ஏக்கல் நிலத்தில் 4 வீடுகள் கட்டி, வாதிகளும், அவரது மகன்களும் குடியிருந்து வருகிறார்கள் என்றால் தற்பொழுது உள்ளார்கள்.

6) ஆறகளூர் எல்லையில், வாதிகளுக்கு 10 ஏக்கர் நிலம் உள்ளது என்றால் அங்கு இல்லை, ரேசன் கடை அருகில்தான் உள்ளது, இந்த ஊர் எல்லையில் இல்லை, காமக்காபாளையம் எல்லையில் உள்ளது. அந்த ஊரில் ஒரு வீடு உள்ளது என்றால் இருப்பதாக சொன்னார்கள். அந்த வீட்டில் அலமேலு என்பவர் குடியிருக்கிறார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

7) சொத்து அனைத்தும் கருப்பாயி அம்மாளுக்கு எப்படி வந்தது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது, ஆனால் அது பூர்வீக சொத்து, அந்த சொத்தில் நான்கு பேருக்கும் பாகம் உள்ளது, எனது மாமியாருக்கும் அதில் ஒரு பாகம் உள்ளது. கருப்பாயி அம்மாள் யாருக்கு சொத்து எழுதிவைத்தார் என்றால் எனக்கு தெரியாது. இந்த சொத்து மீனாட்சிக்கு வந்தது என்று நான் எவ்வாறு சொல்கிறேன் என்றால் வாரிசு அடிப்படையில் வந்தது, அந்த சொத்து அவரது அம்மாவின் அம்மாவிற்கு சொந்தமானது.

8) முத்துசாமி, செந்தாமரை ஆகியோருக்கு முன்பாக அழகம்மாள் என்பவர் அங்கு குடியிருந்தார் என்றால் எனக்கு தெரியாது. எனக்கு திருமணமாகி எத்தனை வருடங்கள் ஆகிறது என்றால் 40 வருடங்கள் ஆகிறது. பிரதிவாதி முத்துசாமியின் சகோதரர் சின்னசாமி, அவரது தாயார் அழகம்மாள் ஆகியோர்களை தெரியுமா என்றால் தெரியாது. மீனாட்சியும், அலமேலும் என்ன வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் வாரிசு அடிப்படையில் சொத்து வேண்டும் என்று கேட்டுள்ளார்கள்.

9) இந்த வழக்கில் எத்தனை சொத்துக்கள் சொல்லப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. இந்த வழக்கில் குறிப்பிட்டுள்ள சொத்து விவரங்களும் எனக்கு தெரியாது என்றால் தெரியும், எனது மாமியார் வீட்டிற்கு அருகில் உள்ளது, சர்வே எண் தெரியாது, நீள அகலம் 10 க்கு 12 அங்குசம் ஆகும், 4 வீடுகளும் ஒரே அளவு உடையதுதான்.

10) பிரதிவாதிகள் முத்துசாமி, செந்தாமரை குடியிருக்கும் வீட்டிற்கு, பிரதிவாதிகளின் பெயரில் பட்டா உள்ளது என்றால் பட்டா இருந்தது, அதன் பிறகு அதனை ரத்த செய்துவிட்டார்கள். பட்டா ரத்து செய்த விவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான், எனது கணவர் பட்டாவை ரத்து செய்தபொழுது சென்றிருந்தார், அவர் எனக்கு சொன்னார், அதனால் தெரியும். பட்டா ரத்து செய்தது தொடர்பாக, RDO, DRO ஆகியோர்கள் பிறப்பித்த உத்தரவு எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் எனது கணவர் சென்றிருந்தார், அவர் சொல்லி எனக்கு தெரியும்.

11) வருவாய் துறையில், முத்துசாமி, செந்தாமரை பெயருக்கு கொடுக்கப்பட்ட பட்டா இதுவரை ரத்து செய்யப்படவில்லை என்றாலும், வழக்கிற்காக நான் பொய் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. வாதிகள் மீனாட்சி, அலமேலு ஆகியோர்கள், எனக்கு வேண்டப்பட்டவர்கள் என்றால் அவர்களுக்கு சாதகமாக பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

வாதிகள் தரப்பில் மறுவிசாரணை:

எனது கணவர் தற்போது உயிருடன் இல்லை. சோலிஸ்வரன் கோவில் தெருவிற்கு வேறு பெயர்கள் உள்ளதா என்றால், உள்ளது, மேலவீதி, ராஜவீதி, உயர்நிலை பள்ளிக்கூடதெரு என்றும் அழைப்பார்கள்.

பிரதிவாதிகள் தரப்பில் மறுவிசாரணையின் பேரில் குறுக்கு விசாரணை

ஆறகளூர் கிராமத்தில் தேரோடும் வீதி என்பது வேறு, சோலிஸ்வரன் கோவில் தெரு என்பது வேறு, ராஜவீதி என்பது வேறு என்றால் சரியல்ல.

முடிவு நேரம் 03.48 P.M.

Taken down before / by me in open court and read over / interpreted to the witness and acknowledged by him / to be correct

sd/-S.Munusamy
Principal District Munsif, Attur.